திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவைகுண்டம் ஆற்றுப் பாலத்தை விரிவு படுத்துவதற்கு சில சங்கடங்கள் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே போக்குவரத்து நெரிசலை தவிர்க்கின்ற விதமாய் ஸ்ரீவைகுண்டம் அருகிலே ஆழ்வார் திருநகரி, ஆழ்வார் தோப்பு ஆகிய கிராமங்களுக்கு இடையிலே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ஒரு பாலத்தை அமைப்பதன் மூலமாக அந்தப் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கும் முடியும். அதேபோல் பாளையங்கோட்டை தூத்துக்குடி, திருநெல்வேலி மெயின்ரோட்டுக்கும் ஆழ்வார் திரு நகரிக்கும் இடையே ஒரு போக்குவரத்தை உருவாக்குவதற்கும் அது வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, ஆழ்வார் திருநகரி, ஆழ்வார் தோப்புக்கிடையே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ஒரு பாலத்தை அமைப்பதற்கு அரசு முன் வருமா என்பதைஅறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, தற்போது தந்த யோசனைக்கு நன்றி. பிறகு அது பற்றி யோசிக்கலாம்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நொய்யலாற்றின் மீது அல்லது ரயில்வே பாதைகளின் மீது வரும் நிதி ஆண்டில் தமிழகத்தில் எத்தனை பாலங்கள் எங்கெங்கு கட்டப்பட உள்ளன? அதில் திருப்பூர் ரெயில்வே மேம்பாலமும், நொய்யலாற்றின் மேம்பாலமும் சேர்க்கப்பட்டுள்ளதா? அந்தப்பணி எப்போது தொடங்கும் என்பதை அமைச்சர் மூலம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, இது ஸ்ரீவைகுண்டம் பாலம் பற்றிய கேள்வி. ஆனால், ஆர்.ஓ.பி. பற்றி நேற்று கேள்வி வந்தது. நேற்று யு மிஸ்ட் தி பஸ். நேற்று கேள்வி கேட்டிருந்தால் அது எப்போது வரும் என்பதை சொல்லியிருக்கலாம். நாளைக்கு வேண்டுமானால் கேளுங்கள் சொல்லுகிறேன்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் எல்லா ஊர்களுக்கும் பாலத்தைக் கொடுத்துக் கொண்டே இருக் கிறார்கள். எங்கள் மாவட்டம், தஞ்சை மாவட்டம் நிறைய ஆறுகள் வாய்க்கால்கள் உள்ள மாவட்டம். அந்தப் பகுதி யிலே வெள்ளக் காலங்களில் தண்ணீர் வரும் காலங்களில் மக்கள் மிகவும் சிரமப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கே சிறு சிறு பாலங்களாகத் தான் வருகின்றன. ஆகவே பகுதி 2 திட்டத்தின் கீழ் தஞ்சை மாவட்டத்திற்கு வந்திருக்கிற 3 பாலங்களையும்

1990 ஏப்ரல் 12]

சாங்ஷன் செய்வீர்கள் என்றால் மொத்த செலவும் கொஞ்சம் தான் ஆகும். ஆகையினால் அதை பரிசீலிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பொதுப் பணித்துறை மானியம் 23 ஆம் தேதி வருகிறது. அதற்குப் பிறகு மற்றவை வெள்ளித் திரையில் காண்க.

ஏரியில் வடிகால் வசதி.

*9150—திரு. மீ. அ. வைத்தியலிங்கம் :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, 148-வது வட்டம், வேளச்சேரி யில் உள்ள சர்வே எண் 123/1-ல் உள்ள பொதுப்பணித் துறை ஏரியில் வடிகால் வசதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : ஆம். மேற்கண்ட வேளச்சேரி ஏரிக்கு வடிகால் வசதி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

9.45 மணி

திரு. மீ. அ. வைத்தியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 123/1 சர்வே நம்பர் உள்ள பொதுப்பணி ஏரியில் தற்போது 56 ஏக்கர் பரப்பளவில் வீட்டு வசதி வாரியமும், 36 ஏக்கர் பரப்பளவில் குடிசை மாற்று வாரியமும், பல்வேறு பணிகளை மேற்கொண்டிருக்கிற காரணத் தால், கொள்ளளவு மிகவும் குறைந்து விட்ட நிலையில், அப் பகுதியிலே வாழ்கிற மக்கள் பாதிக்கப்படுகின்ற நிலை ஏற்பட் டிருக்கிற காரணத்தால் உடனடியாக இதை அரசு மேற் கொள்ளுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்காகத்தான் மேற்சொன்ன திட்டம் தீட்டியிருக்கிறது என்று சொன்னேன்.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திட்டம் தீட்டி ஆண்டுகள் இரண் டாகின்றன. அதற்கான வரைபடத்தைக்கூட நான் மாண்புமிகு

அமைச்சரிடத்திலே தந்திருக்கிறேன். தற்போது கொள்ளளவு குறைகின்ற அளவிற்கு அரசு சீர்திருத்தப் பணிகளைச் செய்கின்ற காரணத்தால், ஒரு சிறு மழை பெய்தாலும் அந்தப் புறத்திலே இருக்கிற மக்கள் பாதிக்கின்ற அளவிற்கு மதகின் அளவையும் அரசு குறைத்துவிட்ட காரணத்தால் உடனடியாக இந்தக் கால்வாயை அமைப்பதற்கும், அந்தக் கால்வாய் அமைக்காத காரணத்தால் மாநகராட்சி அமைக்க வேண்டிய வடிநீர்க் கால்வாய்கள் கூட அமைக்காமல் இருப்பதால், விரைந்து இந்த ஆண்டே அமைச்சர் இதை மேற்கொள்வாரா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதில் ஒரு பெரிய பிரச்சினை என்னவென்றால், ஏரியிலே பாதி வீடு கட்டிவிட்டார்கள். மழைக் காலங்களில் தண்ணீர் வந்து விடுகிறது ஏரிக்கு, தெரியாத்தனமாக. பிறகு அந்த வீடுகளைப் போய் அது ஆக்கிரமிக்கிறது. இவர்கள் ஏரியை ஆக்கிரமித்தார்கள். பிறகு நீர் வந்து அந்த வீடுகளை ஆக்கிரமிக்கப் போகிறது, அப்போது வீட்டுக்குள் தண்ணீர் வந்து விட்டதே என்கிறார்கள். ஏரியில் போய் வீடுகளைக் கட்டினால் தண்ணீர் வராமலா போகும்? தண்ணீர் வரும். ஆனால் ஒன்று, பிறகு அந்த வெள்ளத்தைத் தடுக்க வேண்டும். எப்படியோ கட்டி விட்ட வீட்டுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும் என்பதற்காக அந்த ஏரியினுடைய நீர் அளவை 4 அடி குறைக்க வேண்டும் என்பதற்காக ஒரு 'வீர்' கட்டினார்கள், 1986 இல். 1986 இலே ஒரு 'வீர்' கட்டினார்கள். அந்த 'வீர்' கட்டுகிறார்களே, அதிலிருந்து ஒரு நீர் வழிந்தோடி கட்ட வேண்டும். அதைக் கட்டவில்லை. 'வீரை' மட்டும் கட்டி முடித்து விட்டார்கள். அதற்குப் பிறகு என்னவென்றால் ஏற்கனவே மூன்று அபான்டன்ட் வீர்கள் இருக்கின்றன. அதற்கும் வழிந்தோடிகள் கிடையாது. ஆக ஏற்கெனவே மூன்று அபான்டன்ட் வீர்கள், புதிதாகக் கட்டப்பட்ட வீர், ஆக நான்கும் சேர்ந்து, நீர் போவதற்கு, சர்ப்ளஸ் கோர்ஸ் இல்லாமல் போய் விட்டது. ஆக, தண்ணீர் தேங்கிப் போய்விட்டது. அதை மாற்றுவதற்காக, ஏற்கெனவே இருக்கிற அபான்டன்ட் வீர்கள், புதிதாகக் கட்டப்பட்ட வீர், எல்லாவற்றிற்கும் சர்ப்ளஸ் கோர்ஸை ஏற்படுத்துவதற்காக 280 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டம் தீட்டப்பட்டு, அதற்கு அரசு நடவடிக்கைகளிலே இறங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 9366 மாண்புமிகு சமூக நலன்—ஊரகத் தொழிற்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்பெறுகின்றது.

1990 ஏப்ரல் 12]

நரிக்குறவர், நாவிதர் மற்றும் சலவைத் தொழிலாளர்களை தாழ்த்தப்பட்டோர் சமூகத்தில் இணைத்தல்.

*1563—திரு. ஆர். அண்ணா நம்பி :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள நரிக்குறவர், நாவிதர், சலவைத் தொழிலாளி ஆகியோரை தாழ்த்தப்பட்ட சமூகத்தில் இணைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டிலுள்ள நரிக்குறவர் இனத்தைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கலாம் என மைய அரசுக்கு ஏற்கெனவே பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. நாவிதர் இனத்தைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதுபற்றி அரசின் ஆய்வில் உள்ளது, சலவைத் தொழிலாளரினத்தைத் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில்சேர்ப்பது குறித்து ஏற்கெனவே ஆய்வு செய்யப்பட்டு தற்போதுள்ள நிலையே நீடிக்கலாம் என அரசு முடிவு எடுத்துள்ளது.

திரு. கே. அர்ஜுனன் : பேரவைத் தலைவர் அவர்களே. அதேபோன்று 'போயர்' இனத்தைச் சேர்ந்தவர்கள் கூட கிராமப்புறத்திலே தீண்டத் தகாதவர்களாக வீட்டிலேயே அனுமதிக்காத நிலை இருக்கிற காரணத்தால் அவர்களையும் தாழ்த்தப்பட்டோர் இனத்திலே சேர்ப்பதற்கான ஆய்வு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் பட்டியல் குடியரசுத் தலைவர் ஆணையாக மத்திய அரசால் வெளியிடப்படுபவை ஆகும். இப்பட்டியல்களில் ஏதேனும் திருத்தம் செய்ய வேண்டுமென்றால் அது பாராளுமன்ற சட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட வேண்டும். அதற்கான அதிகாரம் மைய அரசிற்கு மட்டுமே உள்ளது. மாநில அரசிற்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. இரகுமான் கான் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே நரிக்குறவர்கள் எந்தப் பட்டியலில் இருக்கிறார்கள்? மருத்துவக் கல்லூரி, என்ஜினீயரிங் கல்லூரி அல்லது அரசாங்க வேலை வாய்ப்புக்களில் ஏதாவது இருக்கிறார்களா என்ற தகவலை அரசின் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நரிக்குறவர்கள் இனம் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கக் கோரி, இவ்வரசு ஏற்கெனவே மைய அரசிற்குப் பரிந்துரை செய்துள்ளது. அது மைய அரசின் பரிசீலனை